பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 11 ஜு அவ் 16 இதழ் 72

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-4-78

லாலா சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## இந்திராவுக்கு கறுப்புக்கொடி!

### காருக்கு கல்வீச்சு

கோழிக்கோடு, ஏப். 23 இந்திய முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று கோழிக்கோடுக்கு விஜயம் செய்தபோது கறுப்புக்கொடி காட்டப்பட்டது.

அத்துடன் திருமதி காந்தி பயணம்செய்தகார்மீது கற்களும் போத்தல்களும் வீசப்பட்டன

எனினும் திருமதி இந்திரா காந்திக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை.

பத்திரிகை நிருபர்களை ஏற்

[6-ம்பக்கம் பார்க்க]

# புதியஅரசியலமைப்புத்திட்டம் மே மாதம் பேரவைக்கு வரும்!

## விவாதத்தில் பங்குபற்றுவது பற்றிகூட்டணிபின்னர்முடிவு

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய அரசியல் அமைப்புத் திட்டம் மே மாத இறுதியில் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**புதிய அரசியல் அமைப்புத்திட்டம் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டபின் அது பற்றி விரிவாக பரிசீலனைசெய்த பின்னரே அது தொடர்பாக பேரவையில் நடைபெறும் விவாதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்துகொள்வதா இல்லையா என்பது பற்றி தீர்மானிக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.**

புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் தமிழ் மக்களுக்கு நியாயபூர்வமான உரிமைகள் வழங்கப்படும் என ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன உறுதி அளித்துள்ளார். எனவே புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் பிரதிகள் எமது கைகளுக்குக்கிடைத்ததும் அத்திட்டம் பற்றி நாம் நுணுக்கமாக ஆராய்ந்த பின்னரே விவாதத்தில் கலந்துகொள்வது பற்றி கூடித்தீர்மானிப்போம் என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

இதேவேளையில் தற்போது நடைமுறையிலிருக்கும் அரசியல் அமைப்பைத் திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு புதிய அரசியல் அமைப்புத்திட்ட வேலைகளை அநேகமாக பூர்த்திசெய்துள்ளதாகத் தெரிகிறது.

அரசியலமைப்பைத் திருத்துவதற்கான தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்குமாறு பிரதமர் திரு ஆர். பிரேமதாசா முன்னர் கேட்டுக் கொண்டபோதிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கம் வகிக்க மறுத்திருந்தது.

இக்குழுவில் சுதந்திரக்கட்சியும் திரு எஸ் தொண்டமானும் அரசாங்கக்கட்சியுடன் அங்கம் வகித்தது தெரிந்ததே. (ம-இ)

## அனுராதபுரத்தில் இன்று சன்சோனிக் கமிஷன் விசாரணை

(அனுராதபுரம்)

சன்சோனிக் கமிஷன் விசாரணை இன்று காலை அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் திரு. எம். ஸி. சன்சோனி முன்னிலையில் ஆரம்பமாகும்.

அனுராதபுரம், வவனியாவைச் சேர்ந்த 25 பேர் சாட்சியமளிப்பவர்கள் சட்டத்தரணி விக்கிரமசிங்கா இச்சாட்சியங்களை வழி நடத்துவார்.

அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் சார்பில் சட்டத்தரணி கந்தசாமி ஆஜராவார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிலரும், இங்கு சாட்சியமளிக்கவிருக்கின்றார்கள்.

ஆஸ்பத்திரி ஊழியர் இல

[6ம் பக்கம் பார்க்க]

### மேதினத்தை கூட்டணியுடன்

## செந்தமிழர் இயக்கமும் இணைந்து கொண்டாடும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியும், செந்தமிழர் இயக்கமும் மே தினத்தை இணைந்து கொண்டாடவிருக்கின்றன.

கூட்டணியின் இணைப்புக் குழுக்கூட்டம் இன்று கூட்டணி அலுவலகத்தில் நடைபெறும்போது செந்தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர். (உ)

### பலாலி விமான நிலையத்தில்

## திவாகருக்கு அமோக வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

மூதறிஞர் தந்தை செல்வா நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, முன்னாள் இந்திய மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சரும், சர்வோதயத் தலைவரும், காந்தி சமாதான கவுன்சில் தலைவருமான திரு. ஆர். ஆர். திவாகர் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்

திரு. திவாகரை வரவேற்பதற்காக பெருந்திரளாக மக்கள் பலாலி விமான நிலையத்தில் கூடியிருந்தனர்.

செல்வா நினைவாலய அறங்காவல் குழுவின் சார்பில் பேராசிரியர் கு. நேசையா, திரு. க. சச்சிதானந்தம், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம், வெ. யோகேஸ்வரன், காசி ஆனந்தன், ஜனாப் உதுமாலெப்பை ஆகியோர் திரு. திவாகரை

[6-ம் பக்கம் பார்க்க]

## அமைச்சர் இன்று திறந்து வைப்பார்

[அக்கரைப்பற்று]

பொதுநிர்வாக அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம இன்று அக்கரைப்பற்றில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் ஒன்றைத் திறந்து வைக்கிறார். [இ]

### துப்பறியும் பொலிஸ் கோஷ்டியினர் மர்மக்கொலை:

# பண்ணைக் காவலாளி பொலிசாரிடம் சரண்!

## மத்தியகிழக்கில் இருக்கும் முதலாளியைத் தேடி சர்வதேசப் பொலிஸிடம் உதவி

(கொழும்பு)

முருங்கன் துப்பறியும் பொலிஸ் கோஷ்டி மர்மக் கொலை தொடர்பாக விசாரணை செய்துவரும் பொலிசாரிடம் கொலையுண்ட சி.ஐ.டி. பொலிசாரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்ட முருங்கன் கனகரத்தினம் பண்ணையின் காவலாளி நேற்று சரணடைந்தார்.

இக் காவலாளி கொடுத்த தகவலை அடுத்து தற்போது மத்திய கிழக்கில் இருக்கும் குறிப்பிட்ட பண்ணையின் உரிமையாளரைக் கண்டு பிடிப்பதற்கு இலங்கைப் பொலிசார் சர்வதேச பொலிசாரின் உதவியை நாடியுள்ளதாகத் தெரிகிறது.

மத்திய கிழக்கில் இருக்கும் முருங்கன் பண்ணை உரிமையாளரின் விருப்பத்தின் பேரிலேயே சில இளைஞர்களை பண்ணையில் தங்குவதற்கு தாம் அனுமதித்ததாகவும் பொலிசில் சரணடைந்த காவலாளி தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

சம்பவதினம் குறிப்பிட்ட பண்ணைக்கருகே துப்பறியும் பொலிசாரின் வெள்ளை நிற "பேஜோ—404" காருடன் கறுப்புநிறக்கார் ஒன்றும் காணப்பட்டதாகவும் பொலிசாரின்

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

வவனியாவிலுள்ள வியாபார ஸ்தாபனத்துக்கு பத்து வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடைய வான்றைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9082 மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம்.

9082

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற தில்லையம்பலம் செல்வராசா என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் யாழ்ப்பாணம், 19 பீ. ஏ. தம்பிஒழுங்கை, செல்வராசா கைம்பெண் திரவியமலர்

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் இல: 3277

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இதினால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள், எவரும் 1978ஆம் ஆண்டு வைகாசி 12-ஆந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி. அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இதினால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்**
பதிவாளர்.

1978ஆம் ஆண்டு சித்திரை மாதம் 20ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

9105

## திருட்டு

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் பல்லாயிரம் ரூபா பெறுமதியான மூன்று ரேடியோ பெற்றிகள் திருட்டுப்போயுள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான புலன் விசாரணையில் பருத்தித்துறை சார்ஜன்ட் மாணிக்கவாசகர் ஈடுபட்டுள்ளார். [உ]

## "இதுவரை நடவடிக்கை இல்லையாம்"

[வண்ணார்பண்ணை]

நல்லூர்ச்சிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு நிரந்தரமான உதவி அரசாங்கஅதிபர் இல்லாததும் நிரந்தரமான உதவி அரசாங்க அதிபர் பணிமனை இல்லாததும் மக்களுக்கு கஷ்டங்களையும் நிர்வாக ஒழுங்குகளுக்கு வசதியீனங்களை ஏற்படுத்தி வருவதாகவும் இப்பகுதிமக்கள் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினருக்கு புகார் தெரிவித்து வருகின்றனர்.

நிரந்தரமான பணிமனை நல்லூருக்குத் தேவையென்பதையும் இதுசம்பந்தமான கஷ்டங்கள் பற்றியும் நல்லூர் எம். பி சிவசிதம்பரம் அரசின் கவனத்திற்கு பல தடவைகளில் கொண்டுவந்துள்ளார். [உ]

## இன்று லட்சார்ச்சனையும் லட்சஹோமமும்

(ஆனைக்கோட்டை)

நவாலி தெற்கு அந்திரான் முருகமூர்த்தி கோவில் சண்முகப்பெருமானின் லட்சார்ச்சனையும் லட்ச ஹோமமும் இன்று காலை ஆரம்பமாகி மறுநாள் காலை அஷ்டோத்தர கலசாபிஷேகமும் இரவு சண்முகப்பெருமானின் உற்சவமும் நடைபெறும் சாமி விஸ்வநாத குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தை கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ஐ சோமசுந்தரக் குருக்கள் நடாத்தி வைப்பார் விஷேடநிகழ்ச்சியாக மேளக்கச்சேரியும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## யோகாசனப் பயிற்சிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பொதுநல சேவாசமிக ஆதரவில் யோகாசனப்பயிற்சி வகுப்பொன்றை ஸ்ரீசிதானந்த யோகியால் காரை கிழவன் காடுகதிர்காம சுவாமி கோவில் மண்டபத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. பயிற்சியில் தேர்ச்சி பெறுபவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும். (அ

அமைச்சுகளுடன் தொடர்பு

## எம். பி.க்களின் பொறுப்புகளில் சிலமாற்றம்

(கொழும்பு)

அமைச்சர்களுடன்தொடர்பு கொண்டு தமிழ்ப்பிரதேசப் பிரச்னைகளைகள்பற்றி ஆலோசனை செய்வதற்கென நியமிக்கப்பட்ட எம். பி க்களின் பொறுப்புக்களில் மாற்றங்களை தமிழர் விடுதலைக்கூட்டணி செய்துள்ளது இதன்படி எம். பி க்களும் அவர்கள் தொடர்புகொள்ளும் அமைச்சகளும் வருமாறு:

திரு. ஏ. அமிர்தலிங்கம் (காங்கேசன் துறை) பாதுகாப்பு, திட்டமிடல் அமுலாக்கள்

எம் சிவசிதம்பரம் (நல்லூர்) போக்குவரத்து.

வி. என். நவரத்தினம் (சாவகச்சேரி) நீதி, புடவை கைத்தொழில்.

எஸ் இராஜதுரை (மட்டக்களப்பு) தகவல் ஒலிபரப்புத்துறை.

வி தர்மலிங்கம் (மானிப்பாய்) வெளி விவகார உள்ளுராட்சி வீடமைப்பு, நிர்மாணத்துறை.

சி கதிரவேலுப்பிள்ளை (கோப்பாய்) தபால், தந்தித் தொடர்புகள்.

கே, துரைரத்தினம் (பருத்தித்துறை) மீன்பிடி வர்த்தகத்துறை.

ரி. சிவசிதம்பரம் (வவனியா) நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள்.

வி. ஆனந்தசங்கரி (கிளிநொச்சி) உணவு, கூட்டுறவுத் துறை.

கே. பி. இரத்தினம் (ஊர்காவற்றுறை) சமூகசேவைகள், கலாச்சாரம்.

எக்ஸ் எம். செல்லத்தம்பு (முல்லைத்தீவு) பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை.

எஸ். சூசைதாசலன் (மன்னார்) தொழில், நிதிதிட்டமிடல்.

ரி இராஜலிங்கம் (உடுப்பிட்டி) கல்வி, தோட்டக்கைத் தொழில்.

ரி. திருநாவுக்கரசு (வட்டுக்கோட்டை) கைத்தொழில் விஞ்ஞானத்துறை.

வி. யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்) சுகாதாரம்.

[ம-உ]

## கொழும்பில் மூதறிஞர் நினைவாஞ்சலி

[கொழும்பு]

மூதறிஞர் தந்தை செல்வா நினைவாஞ்சலிக் கூட்டம் இம்மாதம் 27-ம் திகதி கொழும்பு ராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நீதியரசர் திரு. ரி. எஸ். பெர்னாண்டோ தலைமையில் நடைபெறும்.

மறுநாள் கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் நினைவாஞ்சலிக்கூட்டம் நடைபெறும். [ம-இ]

•••

## இ. தொ. கா மே தினம்

[வெள்ளவத்தை]

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மேதினத்தை அட்டன் டன்பார் மைதானத்தில் கொண்டாடவுள்ளது.

மேதின மன்று மாபெரும் பொதுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இதில் இடம்பெறும் பல்வேறு தோட்டங்களிலுள்ள கலை நிகழ்ச்சிகளுக்கும் இதில் சந்தர்ப்பமளிக்கப்படும் [உ]

## அரியாலை மாதர் சங்கம் ஆற்றும் பணி

[அரியாலை]

"குடும்ப வேலைகளிலே தமது முழு நேரத்தையும் செலவிடும் பெண்கள் தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களைச் சமூகசேவையிலும் செலவிட்டு வருவதை நான் பாராட்டுகிறேன். சாந்தி சன சமூக நிலைய மாதர் சங்கம் இப்பகுதியில் வாழும் பெண்களுக்கு வேண்டிய சகல சேவைகளையும் செய்துவருவதுடன், பிள்ளைகளையும் பேணி அவர்களின் எதிர்காலம் சிறப்படையக் கூடியதான சேவைகளைச் செய்துவருவது மகிழ்ச்சிக்குரியதாகும்."

இவ்வாறு தொழிலதிபர் இ. அரசரத்தினம் அரியாலை சாந்தி சன சமூக நிலைய மாதர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

மாதர்சங்கத் தலைவி திருமதி அ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற பெண்களுக்கான பரிசில்களைத் திருமதி அரசரத்தினம் வழங்கினார்.

மாதர் சங்கச் செயலாளர் திருமதி இ. சிவானந்தம் வரவேற்புரை நிகழ்த்தினார். உப செயலாளர் திருமதி எ. மதிமாபரணம் நன்றி கூறினார்.


## விளம்பரம்

### பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[வரையறுக்கப்பட்டது]

### பருத்தித்துறை

பதவி வெற்றிடம்: [1] கணக்காளர் தரம் 111

[2] கடனுதவு முகாமையாளர் தரம் 111

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

வயது: 23க்கும் 50க்கும் இடைப்பட்டிருத்தல்வேண்டும். தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ளோருக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

வேதனம்: [1] கணக்காளர் தரம் 111

ரூ. 300/- — ரூ 500/-
ரூ. 12.50X10, ரூ. 15 00X5

[தெரிவுசெய்யப்பட்டவரின் கல்வித் தகைமை, அனுபவம் முதலியனவற்றிற்கேற்ப இந்த சம்பள எல்லைக்குள் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

[2] கடனுதவு முகாமையாளர் தரம் 111

ரூ. 300/- — 500/-
ரூ. 12 50X10, ரூ. 15.00X5

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 10 5-78ம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்புதல்வேண்டும்.

விண்ணப்பப் பத்திரம், மற்றும் தேவையான தராதரங்கள், தகைமைகள் பற்றிய விபரங்கள் யாவையும் பெறுவதற்காக, கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அல்லது நேரடியாகவோ வந்து பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரை ஒட்டப்பட்ட, சொந்த முகவரியிடப்பட்ட தபால் உறை அனுப்புதல்வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் "தலைவர், பருத்தித்துறை பல நோ. கூ சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு அனுப்புதல்வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "கணக்காளர் தரம் 111/ கடனுதவு முகாமையாளர் தரம் 111 பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்படுதல் முக்கியமாகும்.

எமது 1-3-78ம் திகதி விளம்பரத்திற்கு இசையக் கடனுதவு முகாமையாளர் தரம் 111 பதவிக்கு விண்ணப்பம் அனுப்பியவர்கள் மீண்டும் விண்ணப்பம் சமர்ப்பிக்கவேண்டியதில்லை.

**தலைவர்**
பருத்தித்துறை பல நோ. கூ. சங்கம்
பருத்தித்துறை.

11 4 78 9072



# L P காஸ் காட்டும் வழி

★ சுகாதாரத்திற்கு ★ நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு ★ பணத்தை சேமிப்பதற்கு ★ பாத்திரத்தில் கரி பிடிக்காமல் எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு ★ உணவின் ருசி கெடாமல் இருப்பதற்கு ★ வீட்டு வேலைக்கு ஆள் இல்லை என்ற குறையைப் போக்குவதற்கு ★ சமையல் அறையை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு இன்றே பாவிக்கத் தொடங்குங்கள். L. P. காஸ்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் !

**எஸ். பி. சாமி அன் கோ.**
193, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7025

தலைமைக் காரியாலயம்,
72, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
போன்: 22640.

"உருளைக் கிழங்கு, வெங்காயம், மிளகாய் இறக்குமதி

# வட பகுதி விவசாயிகள் வாழ்வில் இருள் சூழும் அபாயம்"

## ஏழாலைக் கருத்தரங்கில் வி. பி. கவலை

(யாழ்ப்பாணம்)

"ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிப் பொறுப்பு ஏற்று மாதங்கள் பலகடந்தும் நாட்டில் அபிவிருத்தி எதுவுமே ஏற்படவில்லை. வடபகுதி விவசாயிகளை பெருமளவில் பாதிக்கக்கூடிய வகையில் வெளிநாட்டில் இருந்து உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் முதலான விளைபொருட்களை இந்த அரசு இறக்குமதி செய்வது பலத்த கண்டனத்துக்குரியது"

இவ்வாறு செந்தமிழர் இயக்க அமைப்பாளர் திரு வி. பொன்னம்பலம், ஏழாலையில் நடைபெற்ற கிளையின் கருத்தரங்கில் பேசுகையில் கூறினர்.

இக்கருத்தரங்கு கிளைச் செயலாளர் திரு.சி. ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

### ஊக்கத்துக்கு பதில் ஊறு

அவர் தொடர்ந்து பேசுகையில்:

இந்த அரசாங்கம் உள்ளூர் விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு ஊறு விளைவிக்கிறது. வெளிநாட்டில் இருந்து பெருமளவு உருளைக்கிழங்கு, வெங்காயம் மிளகாய் முதலான உணவுப் பொருட்களை அரசு இறக்குமதி செய்வது பாதுதூரமான விடயம். இதனால் மிக மிகப் பாதிக்கப்படப் போவது வடபகுதி விவசாயிகளே. இந்த இறக்குமதியால் வடபகுதி விவசாயிகளின்வாழ்வில் இருள் சூழப்போகிறது.

### வெளியார் ஆதிக்கம்?

வெளிநாட்டு மீன்பிடிக்கப்பல்களை இங்கு மீன்பிடிக்க அனுமதிக்கும் அரசின் முடிவுபெரும் விபரீதத்தை விளைவிக்கும். உள்ளூர் மீனவர்கள் பெரிதும் இதனால் பாதிக்கப்படுவர். ரின்மீன் கருவாடு இறக்குமதியும் கண்டிக்கத் தக்கது. உள்ளூர் மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்காமல் அரசு மீன்பிடித் துறையில் வெளிநாட்டு ஆதிக்கத்தை இங்கு நிலைநாட்ட வழிகோலுகிறது.

### அசாத்தியமான திட்டம்


தன்னை தார்மீக அரசு என்று கூறிக்கொண்டு இந்த அரசு செய்வது அத்தனையும் முழுமாறாக உள்ளது.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைக் குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றப்போவதாக ஜனாதிபதி கூறுகிறார். இது நடைமுறைச்சாத்தியமானதல்ல. 30 ஆண்டுத் திட்டத்தை ஆறுவருடத்தில் முடிப்பது எங்ஙனம்?

சுதந்திர வர்த்தக வலயத்தால் பெரும் பாதிப்பு ஏற்படும். கூப்பன் பறிப்பு, நாணய மதிப்பீடு என்பனவும் அரசின் அநீதியான போக்கிற்கு எடுத்துக் காட்டுகளாகும். தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள் இவற்றிற்கு எதிராக அணிதிரளவேண்டும்" என்றார்.

மேற்படி கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை கிளைப்பொருளாளர் திரு. இரத்தினம் லக்ஷ்மிகாந்தன் செய்திருந்தார்.

பெருந்திரளான வாலிபர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (உ)



வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சித்தன்கேணியைச் சிரமதான முறையில் துப்புரவாக்கித் தோண்டிய தொண்டர்கள் மத்தியில் வட்டுதொகுதி தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவிடம் "யாழ்குடாநாடும் நீர்வளமும்" எனும் நூலை மில்க்வைற் தொழிலதிபர் கையளித்தார். சிரமதானத்துக்கு வேண்டிய ஆயுதங்கள் கருவிகளையும் தொழிலதிபரே உதவியுள்ளார்.

## இந்த மாணவருக்கு ஜி.சி.ஈ. உயர்வகுப்பில் அனுமதிதருக

### யாழ். பெற்ருேர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

முன்னைய அரசின் கொள்கை காரணமாகக் கடந்த வருடம் ஜி. இ. ஈ. சாதாரண தர வகுப்புகள் பாடசாலைகளில் இல்லாததினுல் தனிப்பட்ட முறையில் ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களுக்கு இவ்வருடம் ஜி. இ. ஈ. உயர்தர வகுப்பில் கல்வி கற்கச் சந்தர்ப்பம் வழங்குமாறு யாழ். பெற்ருேர் சங்கச் செயலாளர் திரு. சி. பொன்னையா சகல கல்லூரி அதிபர்களையும் கேட்டுள்ளார்.

கல்லூரி அதிபர்களுக்கு திரு. பொன்னையா எழுதியுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு:

சென்ற அரசாங்கத்தால் புகுத்தப்பட்ட கல்விக் கொள்கையின் பிரகாரம் சென்ற ஆண்டில் க. பொ. த. [சாதாரணம்) வகுப்புகள் கல்லூரிகளில் இருக்கவில்லை. இதனுல் பல மாணவர்கள் தனிப்பட்ட முறையில் பரீட்சார்த்திகளாக க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. தற்போது இப் பரீட்சை முடிவுகளும் வெளிவந்துவிட்டன. அதில் சித்தியடைந்த மாணவர்கள் தொடர்ந்தும் உயர் கல்வி பெற ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும் நோக்கத்துடன் இம்மாணவர்களைக் க. பொ. த. (உயர்தர] வகுப்புக்களில் கீழே காணப்படும் விடயங்களைக் கருத்திற்கொண்டு அனுமதிக்குமாறு தயவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

தனிப்பட்ட முறையில் பணம் செலுத்தி, வெளியில் கல்வி பயிலமுடியாத மாணவர்கட்கு இவ்வாறு வகுப்புகள் ஏற்படுத்திக்கொடுப்பது அரிய தொண்டாகும்.

வயது குறைந்த மாணவர்கள் பலர் இந்நிலையில் உள்ளார்கள்.

தேசிய உயர் கல்வி வகுப்புகளில் கல்வி கற்கும் வாய்ப்புகள் கிடைக்காத மாணவர்களில் பலர் இம்முறை க. பொ.த. [சாதாரண] பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள். எனவே அவர்களும் உயர் கல்வி பெற ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பதாக அமையும்.

தற்போது க. பொ. த. (உயர்தர) பரீட்சை முடிவின் அடிப்படையிலேயே அரசாங்கம் பெரும்பாலும் தொழில் வழங்கிவருவதால் இவ்வாறான மாணவர்கள் உயர்தர வகுப்பில் பயிலாவிட்டால் பாதிக்கப்படுவார்கள்.

தற்போது க. பொ. த. (உயர்தர] இரண்டாம் வருட மாணவர்கள் வருகின்ற ஏப்ரல் மாதத்துடன் பாடசாலையை விட்டு நீக்கிவிடுவதால் இவ்வாருன மாணவர்களைச் சேர்ப்பதால் புதிதாக உங்களுக்கு ஆசிரியர் பிரச்சினையோ இடப் பிரச்சினையோ, தளபாடப் பிரச்சினையோ ஏற்படுவதற்கு இடமில்லை.

உங்களுடைய நல்லெண்ணத்திலேயே இவ்வாருன மாணவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

உங்களுக்கு இதனுல் ஏற்படும் சிரமங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டு தங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக்கொள்வதற்கு மாணவர்கட்குச் சந்தர்ப்பத்தைக் கொடுக்கும் நோக்கத்துடன் இவர்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன். [இ]

"உள்ளூராட்சித் தேர்தலில்

## சி. பா. தமிழருக்கு கணிசமான பிரதிநிதித்துவம்

### நல்லூர் எம். பி. உறுதி

[அரியாலை]

""எமது இயக்கம் தமிழ் மக்களின் விடுதலைக்காக எடுத்து வரும் சகல நடவடிக்கைகளிலும் இப்பகுதி மக்கள் விசேஷமாக வள்ளுவ சமுதாய மக்கள் காலத்துக்காலம் தமது பங்கைச் செலுத்தி வருவதை நாம் அறிவோம். இதற்காக பாராட்டைத் தெரிவிக்கின்றேன்.""

இவ்வாறு நல்லூர்த்தொகுதி தேசிய அரசபேரவை உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் 28வது ஆண்டு நிறைவு விழா மெய்வல்லுனர் போட்டியின் இறுதி நாள் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. க. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் திரு. எம். சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில், "எதிர்வரும் ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் அவ்வப்பகுதிகளில் வாழும் சிறுபான்மை மக்களுக்கு கணிசமான பிரதிநிதித்துவம் ஒதுக்கிக்கொடுக்க எமது இயக்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் இப்பகுதியில் நீண்ட நாட்களாக நிறைவு செய்யப்படாமல் இருக்கும்விளையாட்டு மைதானமொன்றை கூடிய விரைவில் பெற்றுத்தர ஆவன செய்வேன் என்றும் குறிப்பிட்டார்.

வைத்திய கலாநிதி அ. யோகராசா பேசுகையில் காந்தி சனசமூகநிலையம் இக்கிராமத்திற்கு அளப்பரிய சேவையைப் பாராட்டினர். (உ)

## திருவள்ளுவர் மகாசபை தீர்மானம்

[அரியாலை]

""வள்ளுவ சமூகத்து மக்களிடையே பல இயக்கங்களின் செயல்பாடுகளினுல் சமூகத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படுவதுடன் சமூகத்திடையே பிரிவினையும், வேறு பல பூசல்களும் ஏற்படுகின்றன. இதனை நிவர்த்தி செய்ய இந்த இயக்கங்களுடன் பேச்சுவார்த்தை செய்து சமூக ஐக்கியத்தை மறுபடியும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்"" என்று கோரும் தீர்மானம் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் பொது நிர்வாக சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மகாசபை உப தலைவர் திரு. வே. தம்பிராசா தலைமையில் நடைபெற்ற பொது நிர்வாக சபையில் மகாசபையின் 27 வது வருடாந்த மகாநாட்டை வைகாசி மாதம் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்ய ஒரு உப குழு தெரிவு செய்யப்பட்டது. [உ]

## "இளம் சந்ததியினரிடையே ஒழுக்கம் குன்றுகிறதே"

### மூன்னுள் மேலதிக அரசாங்கஅதிபர் கவலை

[அரியாலை]

"செல்வந்த நாடுகள் வளர்முக நாடுகளுக்கு வேண்டிய நிதியுதவிகளை வழங்கிஅவற்றை வளம்படுத்த முயன்றுவருகின்றன. அதைப்போல அந்த நாடுகளிலுள்ள சமூகசேவை இயக்கங்கள் பின்தங்கிய நாடுகளிலுள்ள சமூகசேவை இயக்கங்களின் உதவியுடன் அளப்பரிய சேவைகளைச்செய்து வருகின்றன. அப்படியாகக் கிடைத்த உதவிகள்மூலம் இக்கிராமத்தில் பல முன்னேற்றமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன."

இவ்வாறு காந்தி சனசமூக நிலையத்தின் 28-வது ஆண்டு நிறைவுவிழா மெய்வல்லுநர் போட்டியின் மூன்றும்நாள் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறிய யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலைய உபதலைவர் திரு. வ. சின்னப்பு தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் திரு. சபாரத்தினம் தொடர்ந்து பேசுகையில், 'இளம் சமுதாயத்தினரிடையே இன்று ஒழுக்கமும், கட்டுப்பாடும் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. இப்படியான போட்டிகளின் மூலம் மக்களிடையேஒற்றுமையையும், நல்ல பண்பையும் வளர்க்க முடியும்' என்று கூறினர்.

நிலையத் தலைவர் திரு. த. இராமலிங்கம்பேசினர். திருமதி சபாரத்தினம் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கினர். (உ)

## சமய அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு நெழுவினி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய கூட்டுப்பிரார்த்தனை சபையினரின் மாநாட்டையொட்டி மாநாட்டுக்குழுவினர் சமய அறிவுப்போட்டியொன்றை நடாத்துகின்றனர்.

இப்போட்டிக்கான பரிசில்களை பல பொதுப்பிரமுகர்களும் சமய ஸ்தாபனங்களும் வழங்குகின்றன. முதல் இரண்டாம் பரிசாக தங்கப்பதக்கமும் மற்றைய 15 பேருக்கு விலையுயர்ந்த பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன. (செ)

## மேதின ஊர்வலம் தனியாகவே நடைபெறும்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (பீக்கிங் சார்பு) தலைமையிலான தொழிற் சங்கங்களும் வாலிபர் சங்கங்களும் கட்சியின் தலைமையின் கீழ் கடந்த வருடங்களைப்போல் இம்முறையும் தனியாகவே மேதின ஊர்வலத்தை நடத்தவுள்ளன.

மே தினக் கூட்டத்தை கூட்டாக யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்ற தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியின் வேண்டுகோளைக்கொள்கையளவில் தாம் ஏற்றுக்கொள்வதாகவும் ஆனல் ஊர்வலத்தை தனியாகவேநடாத்த இருப்பதாகவும் மேற்படி கட்சியின் வடபிரதேசக் கமிட்டியின் சார்பில் திரு கே செந்திவேல் தெரிவித்துள்ளார்.

மேலும் மேதினம் பற்றிய இறுதி முடிவுகளை எதிர்வரும் ஞாயிறன்று கூடும் கட்சியின் பிரதேசக் கமிட்டி எடுக்க உள்ளது எனவும் திரு. செந்திவேல் கூறினர்.

## நியமனம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை மக்கள் வங்கியைச் சேர்ந்த திரு. ஆ. சிவராசா புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம், கூட்டுறவு கிராமிய வங்கி, நெடுந்தீவு கூட்டுறவுக் கிராமிய வங்கி என்பனவற்றிற்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்றுள்ளார். இலங்கைப் பல்கலைக் கழகம்-கொழும்பு வளாகத்தில் பட்டம் பெற்ற இவர் மீசாலையைச் சேர்ந்தவராவர். [அ]

"அல்டோமொரோ விவகாரம்:

# பணயப் பணமாக 50 லட்சம் டாலர் தரத்தயார்"

## இஸ்ரேலிய எம். பி. அறிவிப்பு

ரோம், ஏப். 23 கெரிலாக்களிடம் இருந்து தமது கணவர் விடுதலையாவார் என்று மாஜி இத்தாலியப் பிரதமர் அல்டோ மொரோவின் மனைவி நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதேவேளை அல்டோ மோரோவை விடுதலைசெய்வது தொடர்பாக கெரிலாக்கள் விதித்திருந்த காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது. கொரில்லாக்களின் நிபந்தனையை ஏற்க இத்தாலிய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

திரு. மோரோவை விடுதலை செய்வதற்காக தாம் 50 லட்சம் டாலர்களை தரத் தயாராக உள்ளதாக இஸ்ரேலிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அறிவித்துள்ளார். இந்த பணயப் பணத்தை கெரிலாக்களிடம் எவ்விதம் ஒப்படைப்பது என்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை.

திரு மோரோவை கடந்த மாதம் கெரிலாக்கள் கடத்திச் சென்றது தெரிந்ததே.

### பாப்பரசர் வேண்டுகோள்

இது இவ்வாறிருக்க, கடத்திச்செல்லப்பட்ட இத்தாலிய முன்னாள் பிரதமர் திரு. அல்டோ மொரோவை நிபந்தனையின்றி விடுதலைசெய்யுமாறு பாப்பரசர் போல் கடத்தல் கொரிலாக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளையில், மொரோவை விடுதலைசெய்வது குறித்து இத்தாலிய அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்கு கெரிலாக்கள் இணங்கியுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. [உ-இ]

அணு, ஆயுதக்கட்டுப்பாடு:

# ரஷ்ய, யு. எஸ். அதிகாரிகள் இணக்கம்

மாஸ்கோ, ஏப்: 23 அணு ஆயுதக் குறைப்பு தொடர்பாக பிரிட்டனையும் சேர்த்து கட்டாக ஒத்துழைப்பது என சோவியத்யூனியனும் அமெரிக்காவும் தீர்மானித்துள்ளன. இது தொடர்பாக சோவியத் அமெரிக்க அதிகாரிகள் மாஸ்கோவில் மூன்று நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அணு ஆயுதக் குறைப்பு விடயம் குறித்து கலாகள் இணக்கங்கண்டுள்ளதாக கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## மீன்பிடிவலைத் தொழிற்சாலைகள்

[வெள்ளவத்தை]

இலங்கையில் மூன்று இடங்களில் கடற்றொழில் அமைச்சு நோர்வே அரசின் உதவியுடன் மீன்பிடி வலைத்தொழிற்சாலைகளை அமைக்கஉள்ளது.

ஆழ்கடல் கரையோர மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடிவலைகளை வெளிநாடுகளில் இறக்குமதி செய்வதற்கு ஒரு கோடி ரூபாவை அமைச்சு ஒதுக்கியுள்ளது. [உ]

## ரூ. 45 லட்சத்துக்கு வைரஊசி ஏலம்

லண்டன் ஏப். 23 17ம் நூற்றுண்டில் மொகலாய மன்னர் காலத்தில் பாவித்த வைர ஊசி ஒன்று லண்டனில் 3 லட்சத்து 75 ஆயிரம் டாலருக்கு (45 லட்சத்து 7 ஆயிரம் ரூபா) ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மரகதக் கல்லில் பதிக்கப்பட்ட இந்த வைர ஊசி 16ம் நூற்றுண்டில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு கொண்டு செல்லப்பட்டது. [இ]

# தமிழர் மேதின விழாவிற்கு பெரும் ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழர் மேதின விழாவை இம்முறை வெகுசிறப்பாகக் கொண்டாட தமிழர் விடுதலைக்கூட்டணியும் அதனுடன் இணைந்த ஏனைய இலக்கங்களும் விழா ஏழுங்குகளை மேற்கொண்டுஉள்ளன.

இம்மேதினவிழாவில் 18க்கு மேற்பட்ட மொழிவழித் தொழிற் சங்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏனைய இயக்கங்களும் மாணவர் பேரவையினரும் மகளிர் பேரவையினரும் தமிழ் ஆசிரியர் சங்கமும் ஒன்றிணைந்து ஓர் ஊர்வலத்தினையும் கூட்டத்தையும் நடாத்த விருக்கின்றனர் என்று மே தின அமைப்புக் குழுச் செயலாளர் செல்லையா மெற்றுஸ் மயில் தெரிவித்தார்.

அவர் வேலும் தெரிவித்ததாவது: மேதின ஊர்வலம் நல்லூர் முத்தரைசந்தியில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி பிரான்லிவீதி மணிக்கூட்டுவீதி மின்சார நிலையவீதி ஆஸ்பத்திரிவீதி வேம்படிவீதி யூடாகச் சென்று மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தை சென்றடையும். இவ்வூர்வலத்தில் இளைஞர்களின் விவசாய மாணவர் மகளிர்அணி உழவு இயந்திரம் கார் லொறி துவிச்சக்கரவண்டிகளின் ஊர்தியும் இடம் பெறும்.

இவ்வாறுன அணிகளுக்குப் பின் வருவோர் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் தொழிலாளர் அணி சந்திரா ஸ்ரீபதி யாழ்ப்பாண அரசாங்க எழுதுவினைஞர் சங்க கிளைச்செயலாளர் திரு. பொ. காராளசிங்கம், வே. சுப்பிரமணியம் இலங்கை போக்குவரத்துச்சபை கோண்டாவில் சந்தியாபிள்ளை தேவராஜா தேசிய அரசாங்க சுகாதார சேவை தம்பு கந்தையா மாணிக்கம் இளைஞர் அணி மாவை சேனாதிராஜா சிவமகாராஜா மகளிர் அணி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மோட்டார் அணி சி. நாகராஜா என். ரி. செல்லத்துரை ஊர்திகள் ஓ டி. இமானுவல் திரு. என். பாஸ்கரன் ஊர்வல ஒழுங்குகள் ஆ. வேலுப்பிள்ளை.

ஊர்வலத்தை தொடர்ந்து யாழ்மத்திய கல்லூரியில் நடைபெறும். மேதின விழாவில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களும் உரைநிகழ்த்துவர்

உரை நிகழ்ச்சிகளுக்கு முன் "தமிழர் மேதினம்" என்னும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை சின்னமணி வில்லிசைக்குழுவினர் நடாத்துவர்.

இறுதி நிகழ்ச்சியாக கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

மேதின விழாஏற்பாடுகளை சட்டத்தரணி திரு மு. ஆலாலசுந்தரத்தைத் தலைவாராகக் கொண்ட தமிழர் மேதின அமைப்புக்குழு ஒழுங்கு செய்து வருகின்றது என்றும் அவர் சொன்னார். (கா)

ஜனாதிபதி தேர்தல்:

# பங்களாதேஷில் பிரசாரங்கள் ஆரம்பம்

டாக்கா, ஏப்: 23 பங்களாதேஷில் ஜூன் மாதம் 3ம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரவேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

பொதுக்கூட்டங்கள் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் ஊர்வலங்கள் நடத்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் நீதியாகவும் பாரபட்சமற்றதாகவும் நடத்தப்படும் என்று பங்களாதேஷ் பிரதம தேர்தல்அதிகாரி அறிவித்துள்ளார். (உ)

# சஞ்சய்க்கு எதிராகவும் ஷா கமிஷன்வழக்கு

புதுடில்லி, ஏப் 23 ஷா கமிஷன் முன் ஆஜராகி சாட்சிசொல்ல மறுத்தமைக்காக திருமதி இந்திரா காந்தியின் புதல்வர் சஞ்சய் காந்தியின் மீதும் வழக்குத் தொடருமாறு கமிஷனர் ஷா நேற்று உத்தரவிட்டார்.

இதையடுத்து கமிஷன் மண்டபத்துக்கு வெளியே சஞ்சய் காந்தியின் ஆதரவாளர்களுக்கும், அரசாங்க ஆதரவாளர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து 76 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சஞ்சய் காந்திமீது ஏற்கவே 4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள தென்பது குறிப்பிடத்தக்கது. (இ)



சரித்திர சிறப்புப்பெற்ற நீர்வேலி ஸ்ரீகந்தசாமி கோவில் பூங்காவன உற்சவம் இன்று நடைபெறுகின்றது.

# அமெரிக்க டெலிவிஷனில் யாழ். சோதிடர் நவரத்தினம்

டெக்ஸாஸ், ஏப். 23 யாழ்ப்பாணத்துச் சோதிடரான பண்டிதர் கே. என். நவரத்தினத்தை டெலிவிஷனில் பார்வையிட்ட அமெரிக்க மக்கள் "இவர் எந்த நாட்டு மன்னர்" என்று டெலிவிஷன் நிலையத்திடம் டெலிபோனில் கேட்டனர்.

பண்டிதர் நவரத்தினம் இந்து தமிழ் நாகரிகத்திற்கு அமைய உடையணிந்திருந்தமையே இதற்குக் காரணமாகும்.

பண்டிதர் நவரத்தினம் எழுதிய 'வெற்றிக்குத் திறவுகோல்' என்ற நூல் வெளியீட்டு விழா இங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு இங்கு வந்த நவரத்தினம் டெலிவிஷனில் காட்டப்பட்டார்.



டெலிவிஷனில் திரு. நவரத்தினத்தைப் பார்த்தவர்கள் மீண்டும் அவரை டெலிவிஷனில் காண விரும்பிக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதே இரவு 10-15 மணிக்கு மீண்டும் டெலிவிஷனில் அவர் காட்டப்பட்டார்.

இதற்கு முன்பாக நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டிலும் இருபது படம் பிடித்து பிரசுரம் செய்தனர். அன்று காலை 10 மணிக்கு வானொலி நிலையத்தார் இவரின் கன்னிச் சொற்பொழிவை ஒலிப்பதிவு செய்து மறு நாள் காலை 9 மணிக்கு வெளியிட்டனர்.

ஐக்கிய அமெரிக்காவில் இவர் தங்கியிருக்கும் காலத்தில் 11 டெலிவிஷன் காட்சிகளிலும் 50 ரேடியோ சர்வகலாசாலைகளிலும் சொற்பொழிவாற்றப் பதிவு செய்யப்பட்டுள்ளார். இவரது பிரயாணம், தங்கும் வசதி முதலியன யாவற்றையும் டெக்ஸாஸிலுள்ள ஐவன் பிரசுரத்தார் ஏற்றுள்ளனர். இப்பிரசுரத்தாரே இவரின் நூலை வெற்றிகரமாக வெளியிட்டுள்ளனர். இதன் விலை பதின்நான்கு டாலர் ஆகும். (அ)

# "சமுதாயத்தின் ஜீவநாடி சனசமூக நிலையங்களே"

## வலி.வடக்கு ஏ. ஜி. ஏ. உரை

[யாழ்ப்பாணம்]

"சமுதாயத்தின் ஜீவநாடியாக விளங்குபவை சனசமூக நிலையங்களே. சனசமூக நிலையங்கள் மூலம் மக்களுக்கு நற்கருத்துக்களைப் புகுத்தவும். பல சீர்திருத்த நடவடிக்கைகளை செயற்படுத்தவும் முடியும்"

இவ்வாறு வலிகாமம் வடக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவா காரியாலயத்தில் நடைபெற்ற வலிவடக்குப் பிரிவில் உள்ள சனசமூகநிலையங்களுக்குப் புத்துயிர் அளிப்பது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் கூறினார்.

விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு அப்புத்துரை உட்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சனசமூகநிலையங்களின் புனரமைப்பில் சகலரது ஒத்துழைப்பையும் உதவிஅரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

## கண்ணபுரம் வைரவர் கோவில்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி கண்ணபுரம் வைரவர் கோவில் கட்டிட வேலைகளைக் கவனிப்பதற்கென இப்பகுதி மக்கள் ஒருதற்காலிக குழுவை நியமித்துள்ளனர். குழுவிபரம் வருமாறு:

தலைவர்: ந கனகராசா (கொட்டடி நலன்புரிச் சங்கத் தலைவர்) உபதலைவர்: சி. இன்னராசா, செயலாளர்: கு. குகேந்திரன், உபசெயலாளர்: மு. சண்முகநாதன், தனாதிகாரி: ப. ஆசைப்பிள்ளை, உபதனாதிகாரி: மா. தர்மராசா, உறுப்பினர்கள்: சு. தனபாலசிங்கம், க பூலோகம், நா. முத்துலிங்கம், சீ. பாஸ்கரன், சி [illegible]. (அ)

## சவூதி அரேபியா எதிர்ப்பு

லண்டன், ஏப். 23 ஒபெக்கில் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் எண்ணெய் உற்பத்தி நாடுகளின் மாநாட்டில் எண்ணெய் விலை அதிகரிப்பை சவூதி அரேபியா தொடர்ந்து எதிர்க்குமென்று அறிவித்துள்ளது. (உ)

# சிலிப்பர்கட்டை' நிலையம் மாவையில் நிறுவலாம்'

## விசாரணைக் கமிஷனுக்கு ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

"மாவிட்டபுரத்தில் காங்கிறீட் ஸிலிப்பர் கட்டை உருவாக்கும் நிலையத்தை அமைக்கலாம்' என்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ரயில்வே கமிஷன் விசாரணையில் நிரந்தர பாதை முகாமையாளர் ஆனந்தராஜா சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது!

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு 200 யார் தூரத்திலுள்ள மாவிட்டபுரத்தில் இதற்கான போதிய நிலம் இருப்பதாகவும் அவர் கூறினார் சீமெந்து சிலிப்பரினால் வடபகுதித்தேவையை பூர்த்தி செய்யலாம் என்றும் சொன்னார்.

76ம் ஆண்டு 7,000 கட்டைகளும், 77ம் ஆண்டு 7,000 கட்டைகளும், 78ம் ஆண்டு 6,000 கட்டைகளும் பழுதடைந்திருப்பதாகவும் இவற்றை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும், இதனாலேயே ரயில்கள் தாமதிக்க நேரிடுவதாகவும் கூறினார். 30 மைல் தூரத்திற்குள்ள 8 மைலுக்கு கட்டைகள் மாற்றப்படவேண்டியிருப்பதாகவும், கொங்கிறீட் கட்டைகள் மூலம் இதனை மாற்றலாமென்றும் கூறினார்.

### யோகேந்திரா சாட்சியம்

தமிழ் சோஷலிஸ முன்னணித் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி சாட்சியமளிக்கையில் "பிரயாணிகள் கஷ்டத்தைப் போக்க கொழும்புக்கும் காங்கேசன்துறைக்குமிடையில் கடுகதிச் சேவை ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்" என்று கூறினார்.

யாழ் பாவனையாளர் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஏ. அன்ரனி சாட்சியமளிக்கையில் தலைமன்னார், திருக்கோணமலை ரயில்களில் உள்ளது போன்று 3ம் வகுப்பு "பேர்த்" பெட்டியை மீண்டும் சேவைக்கு விடவேண்டும் என்றார்.

தமிழ் சோஷலிஸ முன்னணியைச் சேர்ந்த திரு. யோகேந்திரா துரைசுவாமி, முன்னாள் நீதிபதி திரு. அரசவால்டன், திரு. தெய்வேந்திரா துரைசுவாமி ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

யாழ்ப்பாணம் பாவனையாளர் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஏ. அன்ரனி, திரு. ஆர். திருநாவுக்கரசு, திருமதி இராசதுரை, வட இலங்கைப் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. ஈ. வி. இராமநாதன், ரயில் பிரயாணிகள் சங்கத்தைச் சேர்ந்த திரு. இரத்தினவேல், திருமதி சுப்பிரமணியம். திருமதி கிறிஸ்ரின் ஆகியோரும், நிரந்தரப் பாதை முகாமையாளர், திரு சி. ஆனந்தராசா, யாழ் மரக் கூட்டுத்தாபன டிப்போ மனேஜர் திரு. ஆர். பொன்னம்பலம், இறிஸ்தவ சேவாச்சிரமச் செயலாளர் திரு. எஸ். செல்லத்துரை ஆகியோரும் சாட்சியமளித்தனர். விசாரணைகள் யாவும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் பிற்பகல், ரயில்வே கமிஷன், காங்கேசன்துறைக்கும், கன்னாகம் ரயில்நிலையத்திற்கும் நேரில் விஜயஞ்செய்தது.

## 'கூட்டுத் தயாரிப்புகள் தொடரின் விளைவு என்ன?'

### வீ. பி. கணேசன் கருத்து

[வெள்ளவத்தை]

தமிழ்ப்படக்கூட்டுத்தயாரிப்புகள் அதிகரித்தால் நிச்சயம் நம்நாட்டுத் தயாரிப்புகள் அழிந்துவிடும். உள்நாட்டில் படம்தயாரிக்க போதிய பணமுள்ளவர்கள் எல்லோரும் கூட்டுத் தயாரிப்பில் இறங்கிவிடுவார்கள். பணமுள்ள எல்லோரும் கூட்டுத் தயாரிப்பில் ஈடுபட்டால் உள்ளூரில் யார்தான் தமிழ்ப்படம் தயாரிப்பார்கள்?

இவ்வாறு ஈ.எல். சேனநாயகமகாவித்தியாலய தமிழ் இலக்கிய மன்றக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய படத்தயாரிப்பாளர் திரு.வீ.பி கணேசன் தெரிவித்தார்.

இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்பும் அதன் பாதிப்பும் என்ற தலைப்பில் நடந்த கூட்டத்தில் இலக்கியமன்றத் தலைவர் ஜெயஸ்ரீதர் தலைமை வகித்தார்.

திரு. வீ. பி, கணேசன் தொடர்ந்து பேசுகையில்.

"பைலட் பிரேம்நாத்" ஒரு பொருளாதாரக்கூட்டுத் தயாரிப்பே தவிர அது ஒரு கலைக் கூட்டு அல்ல. முதலீடுசெய்யும் எவரும் தங்கள் பணமும் லாபமும்திரும்பிவரவேண்டும்என்றுதான் இந்திப்பார்கள் அதனால் முடிந்தவரை தமிழக நடிகர்களை வைத்துப் படம் தயாரிக்கவே அவர்கள் முற்படுவார்கள்.

எனவே இப்படியானபொருளாதார கூட்டுத்தயாரிப்புகள் நம்நாட்டு திரைப்பட வளர்ச்சியை நிச்சயம் பாதிக்கும். 10 வருடங்களுக்குமுன்பு இப்படிப்பட்ட கூட்டுத் தயாரிப்புகள் வந்திருப்பின் நாம் அதை வரவேற்றிருப்போம். ஆனால் அதற்கு இப்போது காலம் கடந்துவிட்டது"என்றார். [உ]

---

## ஆய்வுக் கட்டுரைப் போட்டி

[யாழ்ப்பாணம்]

அமரர் செ. தனபாலசிங்கனின் நினைவுதினம் ஜூன் மாதத்தில் கொண்டாடப்படவிருப்பதனையொட்டி அவர் எழுதி வெளியிட்ட 'கந்தபுராணச் செய்திகள்' 'கீதை அமுதம்' ஆகிய நூல்களுள் ஒன்றைய பற்றி ஆய்வுக்கட்டுரைப போட்டிஒன்று நடாத்தப்படவிருக்கிறது.

பரிசுகள் இதற்கு வழங்கப்படும் எனவும் கட்டுரை கிடைக்கவேண்டிய கடைசித் திகதி 10-6-78 என்றும் தனபாலசிங்கன் நினைவுவிழாக்குழுத் தலைவர் அறிவித்திருக்கிறார். [உ]

## வவுனியா விளையாட்டுவிழா

(வவுனியா)

வவுனியா புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக்கழக 3வது விளையாட்டுவிழா இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமை கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இவ்விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

அகில இலங்கை ரீதியில் 4 பேர் கொண்டகரபந்தாட்ட சுற்றுப்போட்டி வடக்குகிழக்கு மாகாண ரீதியில் 90 மைல் மரதன் ஓட்டப்போட்டி ஆகியன உட்பட பல போட்டிகள் விழாவில் நடைபெறும், (இ)

## விசாரணை நடத்த வருகிறார்

[யாழ்ப்பாணம்]

யாழ். உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் சமீபத்தில் நடத்தப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டம் செல்லுபடியாகாது என்று செய்யப்பட்ட புகார் பற்றி விசாரணை செய்யும் பொருட்டு உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் திரு டன்லிடன் டீ. அல்விஸ்ஸும் சங்கச் செயலாளர் திரு. ரி. ஜீவரத்தினமும் இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள்.

மேற்படி வருடாந்தக் கூட்டம் செல்லுபடியாகாது என்று யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த திரு. என் சோமசுந்தரம் இலங்கை உதைபந்தாட்டச் சங்க சம்மேளனத்திற்குப் புகார் செய்திருந்தார். [உ]

## யாழ். ஹேட்டரி நடத்தும் பஸ் நடத்துநர் தெரிவு கூப்பன்

போட்டி முடிவு தினம் 25-4-78

நடத்துநரின் பெயர்.............................

பதிவு இலக்கம்.............................

அனுப்புபவரின் பெயர் .............................

அனுப்புபவரின் விலாசம்.............................

திகதி ............................. 

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

## ஆடு திருடினராம்

[திருக்கோணமலை]

ஆடு திருடி விற்க முற்பட்டதாகக் கூறப்படும் எட்டுப் பேர் திருமலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். (உ)


வெலிங்டன் (சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-30
சிவாஜி - மஞ்சுளா
மனிதனும் தெய்வமாகலாம்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
வாடைக்காற்று

நாகம்மாள் (மன்னார்)
தினசரி 6-45, 10-00
விஜயகுமார் நடித்த
தாயில்லாக்குழந்தை

Rio (Jaffna) (Phone; 7607)
From 26-4-78
Man in the Iron Mask
New Realese (Color)

4 வது வெற்றி வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

4வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
இதுவரை யாழ். நகரில் திரையிடப்பட்ட பழைய படங்களின் வசூலை முறியடித்து சாதனை புரிகிறன்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா நடித்த
விக்கிரமாதித்தன் (புதிய பிரதி)

சாந்தி போன்: 7612
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
3-வது வெற்றிவாரமாக நடைபெறுகிறது!
சிவாஜி நடிக்கும் கந்தன்கருணை ஈஸ்ட்மன் கலர்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ரவிசந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த
ஜானகி சபதம்

Regal (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m.
SPORTING CHANCE
(Colour) (Spy Film)

வெற்றிகரமான 5 4வது நாள்
மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.--வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692 வெற்றிநடை போடுகிறது
சிவபாதவிருதயர், சந்திரகலா நடித்த
(யாழ். நகர்)
தென்றலும் புயலும்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த
நல்லநேரம் (புதிய பிரதி)

# தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேசியமகாநாடு

## திவாகர் -- வி. பி. சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக ஏற்க இலங்கை அரசு தயங்குகிறது என்று நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த முன்னாள் பாரத மத்திய அமைச்சரும், மாஜி மாநில கவர்னருமான திரு. ஆர். ஆர். திவாகரைச் சந்தித்து உரையாடியபோது செந்தமிழர் இயக்க அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் எடுத்துரைத்தார்.

கோப்பாய் எம். பி. திரு. எ. கதிரவேலுப்பிள்ளையின் அழைப்பின் பேரில் அவரது இல்லத்தில் திரு. வி. பி. திரு. திவாகரை நேற்று நண்பகல் சந்தித்து ஒன்றரைமணித்தியாலத்திற்கு மேலாக பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக உரையாடினார்.

அதிகாரம் பரவலாக்கல், மொழிவழிமாகாண அமைப்பு என்பன குறித்து 1920ம்-ஆண்டில் நாக்பூரில் நடைபெற்ற தேசிய காங்கிரஸின் மாநாட்டில் அண்ணல் காந்திஜியால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை திரு வி பி. திரு. திவாகரிடம் நினைவு கூர்ந்தார்.

பாரதத்தில் எந்த ஒரு மொழிக்கும் மத்திய நிர்வாக மொழி அந்தஸ்து அளிக்கப்படாதது குறித்து திரு. வி. பி. வரவேற்புத் தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை உள்ள பெரும் பிரச்னை மத்தியில் அதிகாரங்கள் குவிந்திருப்பதுதான் என்றும் அதிகாரம் பரவலாக்கல் பற்றிய காந்திஜியின் கொள்கை பின்பற்றப்படவேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறதென்றும் திரு. வி. பி. குறிப்பிட்டார்.

சோவியத் யூனியனைப் பொறுத்தவரை அங்கு இனங்களின் தனித்துவம் பாதுகாக்கப்படுவது குறித்து திரு. திவாகர் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்த உரையாடலுக்கு முன்பதாக திரு கதிரவேலுப்பிள்ளை எம். பி திரு வி பி யை "இவர் ஒரு மார்க்ஸிஸ்ட்; பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டவர்" என்று அறிமுகப்படுத்தினார். அப்போது திரு. திவாகர் "உங்களுக்கு பலாத்காரத்தில் நம்பிக்கை உண்டா?" என்று திரு வி பியை வினவினார்.

"பலாத்கார முறையினை நான் வரவேற்பதாக இல்லை, எனினும் உலகவரலாற்றை உற்றுநோக்குமிடத்து போராட்டங்களில் வெற்றியீட்ட பலாத்கார முறை தவிர்க்கமுடியாதது என்று உணர்த்துகிறதே" என்றார் வி பி.

"நான் சரியானது என்று நினைக்கின்ற பாதையில் திடமுடன் செயற்படுவேன்" என்று தம்நிலையினை திரு வி பி திரு திவாகரிடம் தெரிவித்தார். [உ]

## தமிழிசைவிழா இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றுவரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 20-வது ஆண்டு தமிழிசைவிழாவின் நான்காம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 5-45மணிக்கு அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவ மாணவிகள் பாட்டும் வயலினும், 6-15: செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்-பாட்டு, 7-15: திரு. பொன் சுபாஷ்சந்திரன்-பாட்டு, 8-15: திரு. ஏ. நமசிவாயம்-பாட்டு.

திரு. கே. சித்திவிநாயகம், திரு எஸ் சர்வேஸ்வரசர்மா ஆகியோர் வயலினும், செல்வன் சோமாஸ்கந்தசர்மா, திரு ரி. பார்த்திபநாதன் ஆகியோர் மிருதங்கமும் வாசிப்பர். (அ)

## இந்திராவுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றிச் சென்ற கார்ச்சாரதிக்கு தலையில் ஏற்பட்ட பலத்த காயத்தை அடுத்து அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். [இ]

# ஜூன் மாதம் ஒத்திவைப்பு

## நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் 'இராசு' இம்முறையும் பங்குபற்றவில்லை

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மகாநாடு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டை மே மாதம் 12ம், 13ம், 14ம் திகதிகளில் கோப்பாயில் நடத்துவது என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நேற்று யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணிமனையில் நடைபெற்ற நடவடிக்கைக் குழுக்கூட்டத்திலேயே மகாநாட்டை ஜூன் மாதம் 23ம், 24ம், 25ம் திகதிகளில் ஏற்கனவே தீர்மானித்தபடி கோப்பாயில் நடத்துவது என்று முடிவுசெய்யப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புனரமைப்பு வேலைகள் திட்டமிட்டபடி பூர்த்தியாகாமையினாலேயே மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

நடவடிக்கைக்குழுக் கூட்டம் திரு. ரேச் டி வாஸ் தலைமையில் நடைபெற்றது:

### செந்தமிழர் இயக்கம்

செந்தமிழர் இயக்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைப்பு சக்தியாக இயங்குவதற்கு இயக்கத்தின் அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலத்தினால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தையும் நடவடிக்கைக்குழு பரிசிலனை செய்தது. செந்தமிழர் இயக்கத்தை எந்தவகையில் நேசஇயக்கமாக இணைப்பதுபற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதற்கு 7 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இக்குழுவில் திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம், வி. என். நவரத்தினம், எஸ். கதிரவேலுப்பிள்ளை. எஸ். சேனாதிராசா, ரி. திருநாவுக்கரசு, சி. இராஜலிங்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இக்குழு தனது பணியை உடன் ஆரம்பிக்கும்.

### கிழக்கிலங்கை பிரச்னை

மட்டக்களப்பு முதலாவது எம். பி. யான திரு. செ இராசதுரை நேற்றைய கூட்டத்துக்கும் சமுகமளிக்கவில்லை. மட்டக்களப்பில் கூட்டணி அமைப்பு வேலைகளை மே மாதம் 2ந் திகதிக்கு முன் கவனிக்கத்தவறும் பட்சத்தில் அமைப்பாளர் பதவியிலிருந்து திரு இராசதுரை விலகியதாகவே கருதப்படுவாரென்றும் பின்னர் நால்வர் கொண்ட துணை அமைப்பாளர்களும் கூட்டணித்தலைமைப்பீடத்தின் விசேடபிரதிநிதிகளும், மட்டக்களப்புத் தொகுதியில் அமைப்பு வேலைகளில் ஈடுபடவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

துணை அமைப்பாளர்களாக திருவாளர்கள் சாம் தம்பிமுத்து, காசி ஆனந்தன், ஏ அம்பலவாணர், யோசப் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

### பொதுச்சபைக்கூட்டம்

கூட்டணிக்கான அமைப்புவிதிகள், புதியதலைவர் தெரிவு, தனியானகொடி போன்ற செயல்திட்டங்களை அங்கீகரிப்பதற்காக மே மாதம் 28ந் திகதி வவுனியாவில் பொதுச்சபையைக் கூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில், திருவாளர்கள் எக்ஸ் எம் செல்லத்தம்பு, இரா. சம்பந்தன், எம் குசைதாசன், பூ. கணேசலிங்கம், செ. இராசதுரை, சாம் தம்பிமுத்து ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. [கெ-இ]

## ஈழத்தமிழர் பொருளாதார இயக்கத்திற்குப் புத்துயிர்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழர் பொருளாதார இயக்கத்திற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டு, இன்று முதல் தமிழ்ப் பகுதிகள் அனைத்திலும் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர்கள் நிதி திரட்டும் முயற்சியில் ஈடுபடுவார்கள் என்று இயக்கப் பொருளாளர் கூறினார்.

தொண்டர்கள் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல், பழைய அங்கத்துவத்தைப் புதுப்பித்தல் கடந்தகாலங்களில் இயங்காமைக்கான விளக்கமளித்தல், புதிய கைத்தொழில் முயற்சிபற்றிய விளக்கங்கள் ஆகிய பணிகளைச் செய்வர்.

பணம் வழங்குவதற்கான பற்றுச்சீட்டுகள் முன்னர் போல் இருக்குமென்றும் தொண்டர்களை மக்கள், பூரணமாக அடையாளம் கண்டபின்னரே பணம் வழங்குமாறும் இயக்கப் பொருளாளர் ஜனாப் எம். எம். கௌவுத் தெரிவித்துள்ளார்.

இயக்கத்தினால் வங்கியில் இடப்பட்டுள்ள பணத்தின் ஒருபகுதியைக்கொண்டு உடனடியாக சிறு கைத்தொழில்களை நிறுவும் முயற்சியில் ஈழத்தமிழர் பொருளாதார இயக்கம் இப்போது ஈடுபட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## துப்பறியும்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பொலிசார் மேலும் பல இளைஞர்களை விசாரணைக்குட்படுத்தினர்.

## இன்று

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக்கூட்டணி காரைநகர் கிழக்குக் காரியாலயத் திறப்புவிழா இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. ரி திருநாவுக்கரசு காரியாலயத்தைத் திறந்துவைப்பார். [உ]

## பலாலி—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விமான நிலையத்தில் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

நேற்று டாக்டர் திவாகர் செல்வா நினைவாலயத்திற்குச் சென்று தமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொண்டார்.

### வீரசிங்கம் மண்டபத்தில் இன்றுஉரை

இன்றுமாலை, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் இவர் உரையாற்றுவார். இக்கூட்டத்திற்கு பேராசிரியர் கு. நேசையா தலைமை தாங்குவார். [கெ-இ]

## அனுராத...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரும் சாட்சியமளிக்கவிருக்கின்றனர்.

விசாரணை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் அதற்குமுன் சகலரும் நீதிமன்றத்திற்குள் சென்றுவிடவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகளும், சாட்சிகளில் சிலரும் நேற்று மாலை இங்கு வந்துசேர்ந்துள்ளனர்.

அனுராதபுரத்தில் 28ம் திகதி வரை விசாரணை நடைபெறும். சாட்சியங்கள் அத்தினத்தில் முடிவடையாவிடில் விசாரணை நீடிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் சாட்சியமளிக்க தவறியவர்களின் சாட்சியங்கள் அனுராதபுரத்தில் பதிவுசெய்ய ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இவர்கள் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் மூலம் ஏற்பாடுசெய்துள்ளனர். தமிழ் தொழிற்சங்க கூட்டணி பிரதிநிதிகளும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளும் இந்து இளைஞர் பேரவைப் பிரதிநிதிகளும் இன்று விசாரணையின் போது சமுகமளிப்பார்கள்.


வடமாகாண மக்களுக்கு ஒரு மணியான செய்தி !


விற்பனையாகின்றது......

சர்வதேசப் புகழ்பெற்ற

★ சிற்றிசன் கைக்கடிகாரங்கள்

CITIZEN

★ DUNHILL டன்ஹில் சிகரெட்டுக்கள்..



★ மின்சார உபகரணங்கள்

மற்றும் தரத்தில் தன்னிகரற்ற இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கும் நாடுங்கள்.

வடபகுதி மக்களின் நன்மதிப்பு பெற்ற வியாபாரிகள்.

சி. சின்னத்துரை அன் பிறதர்

39, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

போன்: 284 தந்தி: கல்கி



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna Telegram 'Eelanaadu' Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.